# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (புரட்டாசி–ஐப்பசி) அக்டோபர் 2010 ஏர்-25, உழவு-10, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ஏ.கணபதி | வி.பி.வீரப்பன் |
| கே.ராஜாமணி | ஆர்.இளங்கோ |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.ரவி |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | பி.அருள் |
| ஆர். சண்முகவேல் | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| எம். கார்த்திக் | எம்.அமராபதி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| செயலாளர் அறிக்கை | - 3 |
| சங்க நிர்வாகிகள் | - 5 |
| பொதுக்குழுக் கூட்டம் | - 7 |
| மணமகள் தேவை | - 14 |
| விளையாட்டு விழா | - 15 |
| விவசாயிகள் சங்கம் | - 19 |
| மணமகன் தேவை | - 23 |
| திருமண தகவல் மையம் | - 24 |
| மணமகள் தேவை | - 25 |
| மணமகன் தேவை | - 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பித்து 49 ஆண்டுகள் கடந்துவிட்டன. 1961 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்த தர்பார் ஹோட்டலில் திரு. கே.எம்.சென்னியப்பன் தலைவராகவும், திரு.கே.பி.சுப்பிரமணியன், திரு.சி.கே.ராமசாமி, திரு.கே.ஏ.சுப்பிரமணியன், திரு.கே.பழனிச்சாமி, திரு.சி.எம்.இராமசாமி, திரு.கே.ஏ.ஸ்ரீதேவியப்பன், திரு.சி.ஈஸ்வரமூர்த்தி, திரு.சதாசிவம், திரு.நடராஜ் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது நண்பர்கள் சங்கம். சங்க வரலாறு எழுதும் அளவிற்கு பெயரும் புகழும் வளர்ச்சியும் அடைந்துள்ள சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 50 வது ஆண்டில் தலைவராகப் பொறுப்பேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

மூத்த பெரியோர்கள் வகித்த தலைவர் பதவிக்கு சிறுவயது கொண்ட என்னைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தற்கு சங்க முன்னோடிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட என் தலைமையிலான செயற்குழு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சங்க உறுப்பினர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் 26–9–2010 ஞாயிற்றுக்கிழமை அன்று தலைவர் திரு.பி.சென்னியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொதுக்குழுவில் சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். எதிர்வரும் செயற்குழுக் கூட்டங்களில் இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெருமைமிகு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களுக்கும், சிறப்பான முறையில் பணியாற்றி சங்கத்தை வளர்த்த சமுதாயச் சொந்தங்களுக்கும் சங்கத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கத்திற்காகப் பாடுபட்ட நிர்வாகிகளை, பெரியவர்களை மறக்காமல், அவர்களுக்குத் தக்க நேரங்களில் சங்கம் மரியாதை செய்ய வேண்டும் என்று பொதுக்குழுவில் உறுப்பினர்கள் கூறிய கருத்து மிகவும் பாராட்டத்தக்கது. இனிவரும் காலங்களில் அதை மறக்காமல் செயல்படுத்துவோம் என்று உறுதி கூறுகிறேன்.

சங்கத்திற்கு மேலும் ஊக்கமுடன் உழைக்க அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் அன்புடன் வேண்டுகிறேன். சங்கத்தின் செயல்பாடுகள் பற்றி கருத்துக்களை உறுப்பினர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி ! நன்றி !! நன்றி !!!

பரணி கே.பாலசுப்பிரமணி
தலைவர்

**முகவரி** : பரணி பில்டிங்
எச்71, 5வது மெயின் ரோடு,
அண்ணா நகர் கிழக்கு, சென்னை–600102.

❖ ❖ ❖ ❖ ❖

# செயலாளர் அறிக்கை

அன்புநிறைந்த கொங்கு சொந்தங்களே !



வணக்கம். 2010–2012 ஆம் ஆண்டிற்கான சங்கத் தேர்தலில் போட்டியின்றி செயலாளர் பதவிக்கு என்னைத் தேர்ந்தெடுத்தற்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அனைவரது பாராட்டையும் பெற்று, 50 வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் நான் சங்கத்தின் பொருளாளராகப் பொறுப்பேற்று என்னால் முடிந்த அளவுக்கு சங்கத்திற்காகப் பணியாற்றியுள்ளேன். எனக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் கொடுத்த முன்னாள் தலைவர் அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். எனது பணியைச் சிறப்பாகச் செய்திட வழிகாட்டிய முன்னாள் தலைவர் திரு. பி.சென்னியப்பன் அவர்களுக்கும், துணைத்தலைவர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களுக்கும், முன்னாள் செயலாளர் திரு.பரணி பாலசுப்பிரமணி அவர்கட்கும், முன்னாள் இணைச்செயலாளர்கள் திரு. எஸ்.ஆர்.இராஜேந்திரன், திரு.பிரபாகரன் மற்றும் அனைத்து முன்னாள் செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

‘ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் ஊன்றி, மூங்கில் போல் கிளை கிளைத்து’ வளர்ந்துள்ள சங்கத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றுள்ள இத்தருணத்தில் சங்கத்தைத் தோற்றுவித்த கொங்கு நாட்டுத் தங்கங்களுக்கும், சங்கத்தை நல்லமுறையில் வளர்ந்த கொங்குக் குலமணிகளுக்கும், சங்கம் மூன்று மாளிகைகளைக் கட்டி முடிக்க நிதிஉதவி அளித்த அனைத்து கொங்குக் கொடையாளிகளுக்கும், உழைப்பைக் கொட்டி பாடுபட்ட சங்க நிர்வாகிகளுக்கும் எனது பணிவான அன்பைக் காணிக்கையாக்குகிறேன்.

புதிய செயற்குழு எடுக்கும் முடிவுகளுக்கேற்ப எனது பணியைச் சிறப்பாகச் செய்திட கொங்குச் சொந்தங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

நன்றி !

ஆர். செல்வராஜ்
செயலாளர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 60,45,683 |
| 1099 | | R.வசந்தி L.H. | 1,000 |
| 1100 | | M.சந்தோஷி L.H. | 1,000 |
| 1101 | | M.பிரபா LH | 1,000 |
| 1102 | | A.R.விமல் ஆனந் G.H. | 1,000 |
| 1103 | | P.R.சிவரஞ்சினி LH | 1,000 |
| 1104 | | P.டயானா LH | 1,000 |
| 1105 | 329 | M.தியாகராஜன் | 1,000 |
| 1106 | 1893 | K.பாலசுப்பிரமணி | 1,000 |
| 1107 | 2455 | P.சென்னியப்பன் | 1,000 |
| 1108 | 314 | R.செல்வராஜ் | 1,000 |
| 1109 | 2001 | Dr. K.R.P.சண்முகம் | 1,000 |
| 1110 | 1188 | K.K.ரமேஷ் | 1,000 |
| 1111 | 371 | V.P.செங்கோட்டுவேல் | 1,000 |
| 1112 | 199 | P.K.ஈஸ்வரமூர்த்தி | 1,000 |
| 1113 | 2483 | M.அமராவதி | 1,000 |
| 1114 | 1817 | R.இளங்கோ | 1,000 |
| 1115 | 1810 | M.கார்த்திக் | 1,000 |
| 1116 | 253 | K.A.கணபதி | 1,000 |
| 1117 | 1876 | R.சண்முகவேல் | 1,000 |
| 1118 | 2482 | P.அருள் | 1,000 |
| 1119 | 2796 | P.ரவி | 1,000 |
| 1120 | | கார்த்திக் G.H. | 1,000 |
| 1121 | 327 | N.புஷ்பராஜ் | 1,000 |
| 1122 | | S.பிருத்திவிராஜ் G.H. | 1,000 |
| 1123 | | K.நந்தீனிஸ்வரி L.H. | 1,000 |
| 1124 | | P.லோகேஷ் G.H. | 1,000 |
| 1125 | | C.சருவராஜன் G.H. | 1,000 |
| 1126 | | R.லக்ஷ்மி L.H. | 1,000 |
| 1127 | | C.ராதா L.H. | 1,000 |
| 1128 | | S.சிந்து L.H | 1,000 |
| | | | 60,75,683 |

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 2010-2012 ஆண்டிற்கான சங்க நிர்வாகிகள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2010–2012 ஆண்டிற்கான சங்க நிர்வாகிகள் தேர்தல் 26–09–2010 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வேட்பு மனுக்கள் 03–09–2010 முதல் 14–09–2010 வரை பெறப்பட்டன. பெறப்பட்ட 39 வேட்பு மனுக்களையும் 15–09–2010 அன்று தேர்தல் குழு கூடி பரிசீலனை செய்து அனைத்து வேட்பாளர்களும் தேர்தலில் போட்டியிடத் தகுதியானவர்கள் என அறிவிப்புப் பலகையில் தெரியப்படுத்தப்பட்டது. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறக் கடைசி நாளான 18–09–2010 அன்று, வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டது போக, தேர்தலில் போட்டியிடத் தகுதியானவர்களாக 19 உறுப்பினர்கள் இருந்தனர். தகுதியான வேட்பு மனுக்களும், பதவிகளின் எண்ணிக்கைகளும் சரிசமமாக இருந்ததால், வேட்புமனு தாக்கல் செய்த 19 வேட்பாளர்களும், வேட்பு மனு தாக்கல் செய்த பதவிகளுக்குப் போட்டியின்றி தேர்வு செய்யப்படத் தகுதி பெற்றனர்.

தேர்தலின் முடிவுகள் 26–09–2010 அன்று சங்கப் பொதுக்குழு கூட்டம் நிறைவு பெற்ற பின்னர், தேர்தல் குழுத்தலைவர் திரு.எம்.முருகேசன் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டன.

| பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | வேட்பாளர் பெயர் |
|---|---|---|
| தலைவர் | 1 | திரு. கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர் I | 1 | திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| துணைத்தலைவர் II | 1 | திரு. பி.சென்னியப்பன் |
| செயலாளர் | 1 | திரு. ஆர்.செல்வராஜ் |
| இணைச் செயலாளர் I | 1 | திரு. எஸ்.ஆர்.ராஜேந்திரன் |
| இணைச்செயலாளர் II | 1 | டாக்டர். கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | 1 | திரு.கே.கே.ரமேஷ் |

## செயற்குழு உறுப்பினர்கள்

| வ. எண். | வேட்பாளர் பெயர் |
|---|---|
| 1. | திரு. எம்.அமராபதி |
| 2. | திரு. பி. அருள் |
| 3. | திரு. வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| 4. | திரு. ஆர்.இளங்கோ |
| 5. | திரு. பி.கே. ஈஸ்வரமூர்த்தி |
| 6. | திரு. கே.ஏ.கணபதி |
| 7. | திரு. எம்.கார்த்திக் |
| 8. | திரு. கே.ராஜாமணி |
| 9. | திரு. பி.ரவி |
| 10. | திரு. வி.பி.செங்கோட்டுவேலு |
| 11. | திரு. ஆர்.சண்முகவேல் |
| 12. | திரு. வி.பி.வீரப்பன் |

புதிய நிர்வாகக்குழு 26–09–2010 அன்று பொறுப்பேற்றுக் கொண்டது. புதிய நிர்வாகிகளுக்கு தேர்தல் குழுத் தலைவர் திரு.எம்.முருகேசன் அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, சங்கம் மேலும் பல சாதனைகளைப் புரிந்திட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

| | | |
|---|---|---|
| Sd/- | Sd/- | Sd/- |
| (மொ.முருகேசன்) | (செ.அருணாசலம்) | (ஜி.ஆர்.சுந்தரவடிவேல்) |
| தலைவர் | உறுப்பினர் | உறுப்பினர் |

# 2010 ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 34வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் 26–9–2010 அன்று சங்கத்தின் வெள்ளி விழா இல்லத்தில் சங்கத்தின் தலைவர் திரு.பி.சென்னியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவரும், தீரன் சின்னமலை மாளிகை உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவருமான முன்னாள் தலைவர் அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்களின் திருவுருவச் படத்திற்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கத்தின் தலைவர் திரு.சென்னியப்பன் பொதுக்குழுவிற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்றுப் பேசியதோடு, சங்கப் பணிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த கொங்குச் சொந்தங்களுக்கு நன்றி தெரிவித்தார்.

செயலாளர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி ஆண்டறிக்கை வாசித்தார். முன்னாள் தலைவர் திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களுடைய அரிய தொண்டுகளையும், சாதனைகளையும் நினைவு கூர்ந்தார். சங்கத்தின் செயற்குழுவில் உறுப்பினர்களிடம் ரூ. 1000/– தீரன் சின்னமலை மாளிகைக்கு நன்கொடையாகப் பெறலாம் என முடிவெடுத்து, செய்தி மடல் வாயிலாக பல முறை வேண்டுகோள் விடுத்தும், இன்னும் 2000 உறுப்பினர்கள் ரூ1000/– அனுப்பாதது மிகவும் வருத்தத்தை உண்டாக்குவதாக செயலாளர் கூறினார். இதுவரை நன்கொடை அனுப்பாதவர்கள் உடனே அனுப்பும்படி பணிவுடன் வேண்டுகோள் விடுத்தார். 20–09–2009 அன்று நடைபெற்ற சங்கத்தின் பொதுக் குழு கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் தற்போதைய பொதுக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன. 1–4–2009 முதல் 31–3–2010 வரை சங்கத்தின் வரவு செலவு கணக்குகளுக்கு பொதுக்குழு ஒப்புதல் அளித்தது.

சிறப்பான முறையில் பணியாற்றும் சங்கத்தின் தணிக்கையாளர் திரு. பாலச்சந்திரன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அவரை மேலும் இரண்டு ஆண்டுகட்கு சங்கத்தின் தணிக்கையாளராக நியமிக்க பொதுக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. “தீரன் சின்னமலை மாளிகை கட்டியதன் காரணமாக சங்கத்தின் நிதிநிலைமை தற்போது சிரமமாக உள்ளது. கொங்கு நாடு அறக்கட்டளைக்கு இன்னும் ரூ. 30 லட்சம் திருப்பித் தரவேண்டும். உறுப்பினர்களிடம் வட்டியில்லாக் கடனாக வாங்கிய ரூ. 30 லட்சம் திரும்பக் கொடுக்க வேண்டும். தீரன் சின்னமலை மாளிகையின்

எஞ்சியுள்ள பணிகளைச் செய்து முடிக்க ரூ. 20 இலட்சம் வேண்டும். எனவே ரூ. 80 இலட்சம் உடனடியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்'' என்று திரு.பரணி பாலசுப்பிரமணி கூறினார். 110 உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுத்த சங்கத்தலைவர் திரு. பி.சென்னியப்பன், 210 உறுப்பினர்களைச் சேர்த்ததோடு ரூ 7 லட்சம் நன்கொடையாகக் கொடுத்த திரு. அட்லஸ் நாச்சிமுத்து, ரூ.15 லட்சம் நன்கொடையாகவும், ரூ. 10 லட்சம் வட்டியில்லாக் கடனாகவும் கொடுத்த சக்திமசாலா திருமதி சாந்தி துரைசாமி மற்றும் திரு. பி.துரைசாமி ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார். சமுதாயத்திற்காக தமிழகமெங்கும் சுற்றிச்சுழன்று பாடுபட்டுவரும் சங்கத்தின் துணைத்தலைவர் திரு.ஈஸ்வரன், தோளோடுதோள் கொடுத்து அரும்பணியாற்றிவரும் பொருளாளர் திரு. ஆர்.செல்வராஜ் மற்றும் சங்க செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கொடுத்த ஒத்துழைப்பிற்கும், ஊக்கத்திற்கும், வழிகாட்டுதலுக்கும் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

2010–2012 ஆம் ஆண்டிற்கான சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட தேர்தல் குழுத் தலைவர் திரு. NSIT எம்.முருகேசன், உறுப்பினர்கள் முன்னாள் தலைவர் திரு.எஸ்.அருணாசலம், திரு ஜி.ஆர்.சுந்தரவடிவேலு ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பின்னர், பொதுக்குழுவில் உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைக் கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். உறுப்பினர்கள் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு:

**முன்னாள் தலைவர் திரு.எஸ்.அருணாசலம்**

“சென்ற பொதுக்குழுவின் தீர்மாணங்களுக்கு தற்போதைய பொதுக்குழுவில் ஒப்புதல் அளித்ததாகக் கூறினர். அந்தத் தீர்மானங்கள் யாவையென்று தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று திரு.எஸ்.அருணாசலம் கூறினார். அதையடுத்து, அந்தத் தீர்மானங்கள் மீண்டும் வாசிக்கப்பட்டு, அவைகட்கு பொதுக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. திரு.அருணாசலம் அவர்கள் சங்கத்திற்கு ரூ. 10,000/– நன்கொடை வழங்கினார்.

**முன்னாள் தலைவர் கே.பாலசுப்பிரணியன்**

“சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தால் கொங்குநாட்டிற்கும், கொங்கு நாட்டு மக்களுக்கும் பெருமை ஏற்பட்டுள்ளது. சங்கம் நல்ல முறையில் செயல்படுகிறது. தீரன் சின்னமலை மாளிகை பரணி பாலு அவர்களின் பேர் சொல்லும் அளவுக்கு

அவரின் பங்கு அதிகம் முன்னாள் தலைவர்கள் திரு.தேவராஜ், திரு.அருணாசலம், திரு.அப்பாவு, திரு.காளியண்ணன் முதலானோர் அருமையாகப் பணியாற்றினார்கள். இவர்களைப் போன்று சங்கத்திற்காக விதை விதைத்தவர்களையும், சங்கத்தை வளர்த்தவர்களையும் மறக்காமல், பொதுக்குழுக் கூட்டங்களுக்கும், குடும்ப விழாக்களுக்கும் அழைத்து கௌரவிக்க வேண்டும். கட்டடம் கட்டுவது தான் சேவையா எனச் சிலர் கேட்கிறார்கள். மகளிர் விடுதியில் தங்கிப் பயன் பெற்றவர்கள் ஏராளம். இது பெரிய சேவைதான். சங்கம் தரும் விருதுகள் ஆஸ்கார் விருதுகள் மாதிரி.

இல்லங்களை தொழில் நிர்வாகம் செய்வது போல் தகுதியான ஆட்களை நியமித்து சிறப்பாக நிர்வகிக்க வேண்டும். IAS பயிற்சி, Website மேம்படுத்துதல், நிர்வாகப் பதவிக்கு போட்டியிடுபவர்களிடமிருந்து ரூ. 25,000 கட்டாய நன்கொடை ஆகியவற்றை செயல்படுத்த வேண்டும். கொங்குநாடு அறக்கட்டளை பணத்தை உடனே திருப்பித் தரவேண்டும். குடும்பவிழாவை நடத்தியிருக்க வேண்டும். தீரன் சின்னமலை மாளிகை சிறப்பாகக் கட்டிமுடித்ததற்காக திரு. பரணி பாலசுப்பிரமணி அவர்களுக்கு, திரு.கே.பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் பரிசளித்த கொங்கு நாடு முன்னேற்றக் கழகக் கொடி குறியிட்ட மோதிரத்தை கொங்குமாமணி திரு. என்.எஸ்.ஐ.டி. முருகேசன் அவர்கள் அணிவித்தார்

**ஆனந்த், செயற்குழு உறுப்பினர் :–**

“2003 ஆம் ஆண்டு KVG என்ற மென்பொருள் பொறியாளர்கள் கொண்ட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு KVG Trust என்ற அறக்கட்டளை ஆரம்பித்துள்ளோம். www.konguvellalar.com மூலம் இதன் தகவல்களை அறியலாம். கொங்கு ஏழை மாணவர்களுக்கு இந்த அறக்கட்டளை, சங்கத்தோடு இணைந்து உதவி செய்யும்.

**பூபதி, உறுப்பினர் :–**

“தள்ளி வைக்கப்பட்ட குடும்ப விழா விரைவில் நடத்தப்பட வேண்டும். அமெரிக்காவில் உள்ள என் மகன் மூலமாக சங்கத்திற்கு வருடாவருடம் ரூ. 10,000/– அளித்து வருகிறேன். என் மனைவி கணிதத்தில் நிபுணர். பொறியியல் மாணவர்களுக்கு தனிப்பயிற்சி எடுக்கத் தயாராக உள்ளார். அவரது சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். செய்தி மடலில் விவசாயம், இலக்கியம் பற்றி இன்னும் செய்திகள் வரவேண்டும். சங்க நிர்வாகிகள் பணத்திற்குக் கையேந்தும் நிலை இருக்கக்கூடாது. சேவைகளை விரிவு படுத்தலாம். மூன்று மாதங்களுக்கொருமுறை கூடிப்பேச வேண்டும். பெண்களுக்கு

உறுப்பினர் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். திறமையுள்ளவர்களை ஊக்குவிக்க வேண்டும். உறுப்பினர்கள் மனத்தையும் பணப்பையையும் திறந்து வைத்திருக்க வேண்டும்''

**அப்பாவு, முன்னாள் தலைவர் :–**

''கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், பொருளாளரும் நமது சங்கத்தைச் சார்ந்தவர்கள் என்பது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். சங்கத்தின் சொத்துக்களுக்கு மூன்று பாதுகாவலர்களை நியமிக்க வேண்டும். உதாரணம் – காமராஜர் அரங்கத்திற்கு உள்ளது போல் செய்யலாம். எந்தப் பதவியிலும் ஒருவர் இரண்டு முறைகளுக்கு மேல் இருக்கக்கூடாது. மகளிர் விடுதியில் ஓர் அறையில் இரண்டு பேர் மட்டுமே தங்க அனுமதிக்க வேண்டும். இன்னும் நவீன வசதிகள் செய்து தரப்பட வேண்டும். வங்கியில் கடன் பெற்று, இரண்டு மாதத்திற்குள் கொங்குநாடு அறக்கட்டளை கடனை அடைக்க வேண்டும். சங்க விதிகள் திருத்திய பின் Society Act ன்படி பதிவு செய்ய வேண்டும்.

**இரமேஷ் செயற்குழு உறுப்பினர் :–**

''சங்கத்திற்கு நன்கொடையாக எலைட்ஸ்ல் பணம் தருவதற்கு ஆலோசனை செய்து வருகிறார்கள். பணம் கிடைக்க வாய்ப்புண்டு, அதுபோல் கொங்குநாடு அறக்கட்டளையிலும் நன்கொடை கேட்க வேண்டும்.

சங்கத்தின் நிதிநிலையை மேம்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.''

இதற்கு பதிலளித்த சங்கத்தின் முன்னாள் தலைவரும், கொங்கு நாடு அறக்கட்டளையின் உறுப்பினருமான திரு.அருணாசலம் அவர்கள், ''சங்கமும், அறக்கட்டளையும் ஒரே நோக்கத்திற்காகத் தொடங்கியது தான். தற்போது சில காரணங்களால் இடைவெளி அதிகமாக உள்ளது. அறக்கட்டளைக்கு தற்போது ரூ.70 லட்சம் கடன் உள்ளது. எனவேதான் சங்கம் தர வேண்டிய ரூ.30 லட்சத்தை உடனே தர கேட்டு வருகிறது. அறக்கட்டளையின் கடன்கள் தீர்ந்தபிறகு சங்கத்திற்கு உதவுவது பற்றி பரிவுடன் ஆலோசிக்கப்படும். சமுதாயப் பணிகளைச் சேர்ந்தே செய்வோம்'' என்று கூறினார்.

**கோவிந்தசாமி, முன்னாள் தலைவர்**

''சங்கம் சிறப்பான முறையில், எல்லோரும் பெருமைப்படும் வகையில் பணியாற்றி வருகிறது. தீரன் சின்னமலை மாளிகை சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது. சங்கத்திற்கு

உழைத்தவர்களை கௌரவப்படுத்துவதும், உழைத்து வருபவர்களை ஒத்துழைப்புக்கொடுத்து ஊக்கப்படுத்துவதும் அவசியம். சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள், செயல்பாடுகள், சங்கத்திற்காக உழைத்த நிர்வாகிகள், விருது பெற்றோர், நன்கொடை அளித்தவர்கள் போன்ற விவரங்கள் அடங்கிய வரலாற்று நூலை சங்கம் வெளியிட வேண்டும் என்று கூறினார்.

**முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்**

“கடலில் சிறு துளி போல் சங்கத்திற்குப் பணியாற்ற கிடைத்த வாய்ப்புக்கு நன்றி. சங்க உறுப்பினர்கள் இன்னும் 2000 பேர் ரூ. 1000/– நன்கொடையை இதுவரை அனுப்பவில்லையென்று செயலாளர் திரு. பரணி பாலசுப்பிரமணி அவர்கள் வருத்தத்தோடு கூறினார். இதுவரை நன்கொடையளிக்காத உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கடிதம் எழுதினால் உறுதியாக பணம் அனுப்புவார்கள்”

**கே.ஆர்.பாலசுந்தரம், உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை**

“கொங்குச் சமுதாயத்திற்குத் தனி வங்கி வேண்டும். விவசாயத்திற்கு உதவுவதற்காக ஒரு NGO வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கட்டுப்படுத்த ஒரு NGO இருப்பதுபோல விவசாயத்திற்கும் சுய உதவிக்குழுக்களை உருவாக்கி உதவிகள் பெற்றுத்தரவேண்டும்” என்று கூறினார்.

**எம்.சந்திரசேகர், முன்னாள் பொருளாளர்**

சொத்துப் பாதுகாப்பிற்கு வழிவகை செய்ய வேண்டும். சென்னை உறுப்பினர் சேர்க்கை கட்டணம் ரூ. 10,000 என்பதை ரூ. 5000/– ஆகக் குறைக்க வேண்டும். இரண்டுவருடம் உறுப்பினராக இருந்தால் தலைவர் பதவிக்குக் கூடப் போட்டியிடலாம் என்ற நிலை உள்ளது. இது தக்கவாறு மாற்றப்படவேண்டும். சங்கத்தின் சராசரி வருமானத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருமண மண்டபம் கட்ட வேண்டும்.

கொங்கு நாடு அறக்கட்டளை மற்றும் தனிப்பட்டவர்கள் கடன்களை அடைக்க வங்கியில் கடன் வாங்க வேண்டும். இரண்டு ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்ட சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீரன் சின்னமலை மாளிகை கட்டியதற்கு எனது பாராட்டுதல்கள். என் தந்தையார் நினைவாக கல்வி உதவித்தொகை அறக்கட்டளைக்கு ரூ.25,000/– நன்கொடை அளிக்கிறேன்”

**எஸ்.ஆர்.இராஜேந்திரன், இணைச் செயலாளர்**

1975 ஆம் ஆண்டு கோவையில் கொங்கு மாணவர் மாநாடு நடைபெற்றது. 1984 ஆம் ஆண்டு சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தேன். திரு.பி.ஏ.பொன்னுசாமி அவர்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற போது சங்கம் நல்ல வளர்ச்சி பெற்றது. கொங்கு நாடு அறக்கட்டளை ஆரம்பிக்கும்போதே, பிரச்சினை பின்னால் வரும் என்று கூறினோம். இன்று அது உண்மையாகி விட்டது. இதைத் தீர்க்க வேண்டும்.

**ஈ.ஆர்.ஈஸ்வரன், துணைத்தலைவர்**

"இந்தப் பொதுக்குழு சற்று வித்தியாசமானது, சங்கத்தின் பார்வை மாற வேண்டும். மூன்று கட்டிடங்கள் தற்போது உள்ளன. சேர்த்த சொத்து போதும். இனி வரும் வருமானத்தை வைத்துக்கொண்டு சமுதாய சேவை செய்ய வேண்டும். திரு.கோவிந்தசாமி அவர்கள் சங்கத்தின் பதவியில் இல்லாத போதும், சமுதாயப் பணியாற்றினார். சமுதாயத்திற்குப் பாடுபட்டவர்களைப் பட்டியலிட வேண்டும். கே.எம்.சென்னியப்பன் போன்ற ஆரம்ப காலத்தில் சங்கத்திற்கு உழைத்தவர்களை கௌரவிக்க வேண்டும்.

தாய், தந்தை பெயரில் அறக்கட்டளை ஆரம்பித்து சங்கத்தின் மூலம் கல்வி ஊக்கத்தொகை வழங்க வேண்டும். சங்க வரலாறு, கொங்கு வேளாளர் வரலாறு போன்றவைகளை எழுத வேண்டும். கொங்குநாடு அறக்கட்டளைக்கு இன்னும் 2 மாதத்திற்குள் கடன்தொகையைத் திருப்பித் தந்துவிடுவோம். வட்டியோடு தான் திருப்பித் தருகிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வங்கியில் கடன் வாங்கியோ அல்லது தனிப்பட்டவரிடம் வாங்கியோ அறக்கட்டளை கடனை பொருளாளர் அடைத்துவிடுவார்.

கல்வி உதவித்தொகை, IAS / IPS பயிற்சி போன்றவைகளை கொங்குநாடு அறக்கட்டளையும், சங்கமும் சேர்ந்தே செய்ய வேண்டும். சென்னையில் உள்ள கவுண்டர்கள் அனைவரும் வெளியூர்காரர்கள் தான். சாலைவசதி, தொலைபேசி, செல்போன் போன்றவை உள்ளதால், தற்போது சென்னை உறுப்பினர்கள், வெளியூர் உறுப்பினர்கள் என்று பிரித்துப் பார்க்கத் தேவையில்லை. சொத்துக்களைப் பாதுகாக்க தக்க ஏற்பாடுகள் செய்தால் போதுமானது.

கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் தாய்அமைப்பு தான் சென்னை கொங்கு நண்பர்களின் சங்கம். கழகம், பேரவை, சங்கம், அறக்கட்டளை ஆகிய எல்லாமே கவுண்டர்களின் வளர்ச்சிக்காகத்தான் பாடுபடுகின்றன. எல்லோருடய நோக்கமும் ஒன்றுதான். ஆனால் அரசியல் அங்கீகாரம் இல்லாவிட்டால் யாரும் நம்மை மதிக்க மாட்டார்கள்.

கட்சி ஆரம்பித்து பாராளுமன்றத் தேர்தலில் 6.5 லட்சம் ஓட்டுகள் வாங்கிய பின்னர், தமிழகமே நம்மை திரும்பிப்பார்க்கிறது. தீரன்சின்னலை பிறந்த நாளுக்கு அரசு விழா, தென்னை விவசாயிகள் நல வாரிய அமைப்பு, கோவையில் செம்மொழி மாநாடு, மேம்பாட்டு வசதிகள் போன்றவை வந்ததற்குக் காரணம் நாம் கட்சி ஆரம்பித்தது தான். தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தில் இரண்டு உறுப்பினர்களை நியமிக்கச் சொல்லி கேட்டுள்ளோம். கள் இறக்க அனுமதி கேட்டுள்ளோம். வருகிற சட்டமன்ற தேர்தலில் கூட்டணியில் சேர்ந்து 15 எம்.எல்.ஏ. நமக்குக் கிடைத்தால், நாம் சொல்வது நடக்கும். நமது இளைஞர்கள் வளம் பெறுவார்கள். விவசாயிகள் நலம் பெறுவர். கொங்கு நாடு முன்னேறும்.

கொங்கு நாடெங்கும் லட்சக்கணக்கில் நமது சமுதாயத்தினர் நம்மிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். கொங்குநாடு முன்னேற்றக் கழகத்திற்கு சங்கமும், பேரவையும், அறக்கட்டளையும் தருகின்ற ஊக்கமும் ஆதரவும் சமுதாயச் சேவையாற்ற பயன்படும். அரசியல் அங்கீகாரம் பெறப் பெரிதும் பயன்படும்''.

பொதுக்குழுக் கூட்ட இறுதியில் தேர்தல் குழு 2010–2012 ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பட்டியலை அறிவித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் தேர்தல் குழு தலைவர் திரு. எம்.முருகேசன் அவர்கள் சால்வை அணிவித்துப் பாராட்டினார். உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு, செயலாளர் பதில் அளித்து உரையாற்றினார்.

சங்கப் பொருளாளர் திரு. ஆர்.செல்வராஜ், சங்கம் ஒரு பயிற்சிப் பட்டறையாக உள்ளது என்றும், சங்கத்தில் பணியாற்றியவர்கள், பேரவை, கழகம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ளனர் என்றும், இத்தகைய சிறப்பு மிக்க சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், தனது நன்றியுரையில் கூறினார்.

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.R.பிரவீன் B.E., (EEE) |
| பிறந்த தேதி | : | **10–05–1984** நேரம் : **15.30.00** |
| நட்சத்திரம் | : | பூரம் **3**ல் |
| இராசி | : | சிம்மம் |
| இலக்கினம் | : | கன்னி |
| தந்தை | : | கே.இரத்தினசாமி B.Sc., (Agri)<br>Senior Manager, Corporation Bank Ltd.,<br>Dindigul |
| தாயார் | : | ஆர். செந்தமிழ்செல்வி B.Sc., |
| சகோதரி | : | S.R. Preethi (3rd Year B.Tech) |
| சொந்த ஊர் | : | சென்னியங்கிரி வலசு, ஈரோடு மாவட்டம் |
| தொழில் | : | Software Engineer, CTS, Chennai |
| குலம் | : | பொருள்தந்த கூட்டம் |
| செவ்வாய் | : | **2**ல் செவ்வாய் |
| போன் | : | **9003639333 / 9789834224** |

| | | | |
|---|---|---|---|
| | புத<br>சூரி<br>சுக் | ராகு | குளிக |
| | ராசி | | |
| | | | சந் |
| வியா<br>நெப் | கேது<br>யுரே | புளு –சனி<br>செவ் | லக்ன |

| | | | |
|---|---|---|---|
| சனி | லக்ன | குளிக<br>ராகு<br>புத | நெப்<br>செவ் |
| | நவாம்சம் | | |
| | | | சுக் |
| யுரே | கேது<br>புளு<br>சூரி | சந் | வியா |

# அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்

- கங்கை – காவிரி இணைப்புத் திட்டத்தைக் கைவிடுக.
- கங்கையிலிருந்தோ, காவிரியிலிருந்தோ ஒரு சொட்டு நீரும், அமராவதி பவானிப் பகுதிகளுக்குக் கிடைக்காது.
- மக்களின் வரிப்பணத்தைக் கடந்த 35 வருடங்களாக காவிரிப் பிரச்சனைக்காகவே கொட்டி அழுதது போதும் ! இனிமேலும் வீணடிக்காதே!
- கேளராவுக்கு மின்சாரம், அரிசியைக் கொடுத்து, அரபிக்கடலுக்கு செல்லும் 85 நதிகளின் தண்ணீரை, கிழக்கே திருப்பி வறண்டு கிடக்கும் எல்லையோர மாவட்டங்களுக்குத் தண்ணீரைப் பெற உடனடியாகப் பேச்சு வார்த்தை தொடங்குக.
- கங்கை – காவிரி என்றால் உதடுகள் ஒட்டாது !

  அமராவதி – பவானி என்றால் உதடுகள் ஒட்டும் !!
- மேற்கு காய்கிறது ! கிழக்கு செழிக்கிறது !!

அன்பார்ந்த அமராவதி விவசாயப் பெருமக்களே ! பொதுமக்களே ! வணக்கம்! அமராவதி அணையைத் தூர்வாரினால் மேலும் 1 டி.எம்.சி நீரைத் தேக்க முடியும். அரசுக்கு ஒரு ரூபாய் கூட செலவு இல்லை என்று, ஆயிரம் தடவை தமிழக அரசை வற்புறுத்தினோம். செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆகிவிட்டது.

காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு குறித்து ஆராய, இருமுறை, தமிழக அரசு கூட்டிய சர்வகட்சி சங்கக் கூட்டங்களுக்கு, அமராவதி – பவானி விவசாய சங்கங்கள் மட்டும், வேண்டும் என்றே புறக்கணிக்கப்பட்டன.

சென்னையில் உள்ள 'இந்து' ஆங்கில நாளோட்டின் ஆதரவோடு, இதுவரை 10 கூட்டங்கள், 'காவிரிக் குடும்பம் என்ற பெயரால் சென்னையில் நடந்துள்ளன. இதில் கர்நாடகாவில் உள்ள விவசாய சங்கத் தலைவர்களும், மன்னார்குடி, தஞ்சாவூர் விவசாய சங்கத் தலைவர்களும் ரகசியமாகக் கூடிப் பேசி வருகின்றனர். கடைசியாக கடந்த ஜுலை 30, 31 தேதிகளில் காவிரிக் குடும்பம் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இவர்கள் பத்திரிக்கையில் ஒருவரை ஒருவர் தாக்கி பகிரங்கமாக விமர்ச்சித்துக்கொள்வார்கள். ஆனால், நடைமுறையில் திட்டமிட்டு, மீண்டும் ஒரு 'துரோணாச்சாரியார் –ஏகலைவன்' ஓரங்க நாடகத்தை அரங்கேற்றி வருகிறார்கள். அன்று ஏகலைவனின் கட்டை விரல் 'குருதட்சணையாக' வாங்கப்பட்டது. இன்று

அமராவதி பவானியிலிருந்து. (3+1) + (6+8) = 18 டி.எம்.சி. நீர் குருதட்சணையாகக் கேட்கப்படுகிறது. இந்தக் காவிரிக் குடும்பம், வர்ணாசிரம – பஞ்சம தர்மத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில், ஏறக்குறைய எல்லா மாநிலங்களும் மேல் முறையீடு செய்துள்ளன. 1924 ல் வெறும் 3 லட்சம் ஏக்கர்., 1974 ல் 12 லட்சம், 1990 ல் 29 லட்சம் ஏக்கராவாக உயர்த்திக் கொண்ட கர்நாடகாவிற்கும், தீர்ப்பு திருப்தி தரவில்லை.

அதே போல் 1924 ல் 16 லட்சம், 1974ல் 27 லட்சம், 1990 ல் 29 லட்சம் என்று உயர்த்திக்கொண்ட தஞ்சாவூர் மன்னார்குடிக்கும் தீர்ப்பு திருப்தி தரவில்லை.

கேரளாவுக்கு 30 டி.எம்.சி. நீரைக் கொடுத்தாலும், ஒரு சொட்டு நீரைக்கூட தற்போது உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. இதற்கும் தீர்ப்பு திருப்தி தரவில்லை.

இந்த நாடகங்கள் எல்லாம், அமராவதி பவானி விவசாயிகளை, மினுக்கி, மயக்கி ஏமாற்றவே என்பதை நாம் உணர வேண்டும்.

அமராவதியும், பவானியும், கர்நாடகாவின் தண்ணீரை எதிர்பார்த்துக் கட்டப்பட்ட அணைக்கட்டுகள் அல்ல. இந்த அணைகள் கட்டப்பட்டபோது திட்டமிட்டபடி, நிர்ணயிக்கப்பட்ட ஆயக்கட்டுகள், எந்த விரிவாக்கமும் இன்றி நிரந்தரமாக உள்ளன.

அமராவதி – பவானி அணைகள், திருச்சி – தஞ்சாவூர் விவசாயிகளிடம் இருந்து நன்கொடை வாங்கிக் கட்டப்பட்ட அணைகள் அல்ல !

'ஸ்டேன்லி' நிர்தேக்கம் எனப்படும் மேட்டூர் அணையின் கதையும் இதுதான். ஆனால், அமராவதி அணை 1954 ல் கட்டப்பட்டபோது, ஒவ்வொரு விவசாயியும் குறைந்த பட்சம் ரூ. 100 பங்குத் தொகையாக செலுத்தி இருப்பதை, யாரும் மறக்கக்கூடாது. மறுக்கவும் கூடாது.

பவானியில் வெறும் 6 டி.எம்.சி. நீர் பறிக்கப்படுகிறது என்பது தவறாகும். கொடிவேரி அணைக்கட்டுப் பாசனப் பகுதியில் 38500 ஏக்கர்களை இருபோகத்திலிருந்து ஒரு போகமாக மாற்றி அமைப்பதால், மேலும் 8 டி.எம்.சி நீர் பறிக்கப்படுகிறது. ஒரு டி.எம்.சி நீரைக் கொண்டு, 5000 ஏக்கரில் ஒருபோக நெல் சாகுபடி செய்யலாம். அதேபோல்,அமராவதியில் 4350 ஏக்கர் நிலங்கள் ஒரு போகமாக்கப்பட்டால், மேலும் கூடுதலாக ஒரு டி.எம்.சி யை இழக்கிறோம்.

இருபோகத்தை ஒருபோகமாக்கினால், விவசாயக் கூலிக் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து விடுவர்.

காவிரி நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. யை 25–06–1991 ல் இடைக்காலத் தீர்ப்பாக அறிவித்த போதே, 'கட் ஆப் தேதியை நிர்ணயித்த, கர்நாடகாவிற்கு ஒரு பகிரங்க எச்சரிக்கையை விடுத்தது. அதாவது, கர்நாடக மாநிலம், கர்நாடகத்தில் காவேரி மூலம் பாசனம் பெறும் பாசனப் பரப்பை, மொத்தம் 11.20 லட்சம் ஏக்கராவுக்கு மேல் விஸ்தரிக்கபடக் கூடாது.

ஆனால் இதே நடுவர் மன்றம், தனது இறுதித் தீர்ப்பில், கர்நாடகாவிற்கு 27 லட்சம் ஏக்கராவுக்கு அனுமதி அளித்துள்ளது. சிக்கலே இங்கிருந்துதான் ஆரம்பம்! இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டியது யார்?

கர்நாடகாவிற்கு கிருஷ்ணா நதி மூலம், 966 டி.எம்.சி. யும், காவிரி மூலம் 425 டி.எம்.சி யும், கோதாவரி மூலம் 50 டி.எம்.சியும், வடவெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, இம்மூன்றின் மூலம் 32 டி.எம்.சி. யும், ஆக மொத்தம் 1473 டி.எம்.சி. கிடைக்கிறது. இதுபோக சக்ராவதி, சாராவதி, நேத்ராவதி, வராஹி, மகாதாயி, பெட்தி, பெட்திக்கும் ஆகாநசினிக்கும் இடைப்பட்ட பகுதி, வராஹிக்கும் நேத்திராவதிக்கும் இடைப்பட்ட பகுதி, நேத்திராவதிக்கும் பாரபோல் நதிக்கும் இடைப்பட்ட பகுதி, பாரபோல் போன்ற 13 நதிகள் கர்நாடகாவிலேயே உற்பத்தியாகி கர்நாடகா வழியாகவே 2000 டி.எம்.சி. தண்ணீரை அரபிக்கடலுக்கு வீணாக எடுத்துச்செல்கின்றன. ஆகமொத்தம் 3473 டி.எம்.சி. நீர்வளம் கொண்ட கர்நாடகா இதில் பாதியைத்தான் உபயோகித்து வருகிறது. பாதி அரபிக்கடலில் வீணாகிறது.

கர்நாடகாவின் நீரைக் கிழக்கே திருப்புவதனால் பவானிக்கோ, அமராவதிக்கோ பயன் ஏதும் இல்லை! அதேபோல் கேரளாவில் உள்ள 85 ஆறுகளில், அதன் தேவை போக 1250 டி.எம்.சி. நீரைக் கிழக்கே திருப்புவதால் பயனடையப் போவது தமிழகத்தின், குமரி முதல் கோவை வரை உள்ள எல்லையோர மாவட்டங்களே! கர்நாடகாவில் 2000 டி.எம்.சி. யும், கேரளாவில் 1250 டி.எம்.சி. மிகக் குறைந்த செலவில், அருகிலேயே கிடைக்கும் போது,கங்கை – காவிரி இணைப்பு தேவைதானா?

கர்நாடகா மாநிலத்தில் உள்ள கபினி நீர்த்தேக்கம் 16 டி.எம்.சி கொள்ளளவு கொண்டது. ஆண்டுக்கு 5 முறை இந்த அணை நிரம்ப வேண்டும். தற்போது, கர்நாடகா அரசு, கபினி நீர்ப்பிடிப்பு பகுதியிலிருந்து, ஒவ்வொன்றும் 2000 HP நீர்த்தேக்கங்களுக்கு பம்ப் செய்ய திட்டமிட்டுள்ளது. இதனால் கபினி அணையிலிருந்து மேட்டூருக்கு நேரடியாக வரும் நீரின் அளவு குறையலாம்.

தமிழக அரசு ஏறக்குறைய 25 கோடி ரூபாயை, காவிரி

வழக்குரைஞர்களுக்காக செலவழித்துள்ளது. ஒரே ஒரு வழக்கறிஞருக்கு மட்டும் 3 கோடி ரூபாய் பீஸ் தரப்பட்டுள்ளது. இதுபோக, நடுவர் மன்றத்தின் செலவுத் தொகையில் 40 சதவிகிதத்தைத் தமிழ்நாடு செலுத்த வேண்டும்.

கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர் வெகுதூரம் கீழே போய் கருப்புப் பகுதிகள் என அறிவிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் டெல்டாப் பகுதிகளில் நிலத்தடி நீர் கைக்கெட்டும் தூரத்தில் உள்ளது. இதை மறந்து விட்டு கறுப்புப் பகுதியான கோவை மாவட்டத்தில் இருந்து 4+14 டி.எம்.சி. யை, கொழிக்கும் தஞ்சாவூர் டெல்டாப் பகுதிக்குச் சாதகமாக பிடுங்குவது என்பது, அறிவு சார்ந்த காரியமா ? சிந்தியுங்கள் !!

கடந்த 15–08–2007 ல் கரூரில் அமராவதி, பவானி விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் மாநாடு நடந்தது. அதில் காவிரி உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்த்து அமராவதியும், பவானியும் கூட்டாக உச்ச நீதிமன்றத்தில், முறையீடு செய்வது. விவசாயிகளின் பிரம்மாண்டமான மாநாட்டைக் கூட்டுவது, கேரளாவில் வீணாகும் உபரி நிரைக் கிழக்கே திருப்ப, உடனடியாக தமிழக அரசு பேச்சு வார்த்தையைத் தொடங்க வற்புறுத்துவது, வெள்ள கால உபரி நிரை அமராவதி ஆற்றில் நஞ்சைத் தலையூர் அணையிலிருந்து பிரித்து நாச்சிபாளையம், மதியா கூடலூர் வழியாக 480 ஏக்கர் பரப்பளவு கொண்ட, தாதம்பாளையம் குளத்தில் சேகரிப்பது, பவானி ஆற்றில் மேட்டுப்பாளையம் அருகே அத்திக்கடவில் மழைக்கால் வெள்ள உபரி நீரைப் பிரித்தெடுத்து, வறட்சிப் பிரதேசமான அவினாசிப் பகுதிகளுக்குக் கொண்டுசெல்வது. பவானி அமராவதி விவசாய சங்கத் தலைவர்கள் 5 பேர் கொண்ட குழு அமைத்து, தமிழக முதல்வரையும், கேரள முதல்வரையும் நேரில் சந்தித்து விளக்குவது போன்ற முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமராவதி பழைய ஆற்றுப் பாசனத்தில் உள்ள 25 வாய்க்கால் சங்கங்களில் தாராபுரத்திலிருந்து கரூர் வரை உள்ள சங்கங்கள், கட்சி சார்பற்ற முறையில், ‘கொரம்பு’ வாய்க்கால்களை நிர்வகித்து சிறப்பாக ஒருங்கிணைந்த முறையில் செய்யப்படுகின்றன. ஆனால் அமராவதி அணையில் இருந்து தாராபுரம் வரை உள்ள சங்கங்கள் கட்சி சார்பில் இயங்கி வருவதால்,25 சங்கங்களையும் ஒருங்கிணைப்பது என்பது பெரும் சிரமத்திற்குள்ளாகிறது.

அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றிய டாக்டர் அம்பேத்கர் நாட்டின் எல்லா நதிகளையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது மற்றும் இந்தியாவை 1956 ல் மொழி அடிப்படையில் மாநிலங்களாகப் பிரிக்காமல் நீர்வளம், நதிகள், பூகோள அடிப்படையில் பிரிக்க வேண்டும் என்று, அன்று சொன்னதைக் கேட்காததின் விளைவுகள் தான் இன்றைய சிக்கல்களுக்கு முக்கியத் காரணம்.

பவானி –அமராவதி விவசாய சங்கங்களின் கூட்டமைப்புக்கும், எதிர்கால நடவடிக்கைகளுக்கும் பேராதரவு ஒற்றுமையாகச் செயல்படுமாறு, அன்புடன் அனைவரையும் அறைகூவி அழைக்கின்றோம்.

ஒன்றுபடுவோம் ! வெற்றி பெறுவோம் !!

ப.செல்லமுத்து (ஊட்டி)
தலைவர், அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்
பெருமாள் புதூர்–642204 உடுமலை வட்டம்

❖❖❖❖❖

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஏ.சங்கீதா MBBS., D.A., M.D. (A) (Service Quota) |
| பிறந்த தேதி | : | 21–11–1977 திங்கள் காலை 5.00 மணி |
| பிறந்த இடம் | : | நாமக்கல் |
| ஜென்மநட்சத்திரம் | : | உத்திரட்டாதி 3ம் பாதம் |
| ஜென்ம ராசி | : | மீனம் |
| ஜென்ம லக்கினம் | : | துலாம் |
| மகாதிசை இருப்பு | : | சனி 6 வருடம் 10 மாதம் 3 நாள் |
| தொழில் | : | அரசுப்பணி, (தற்போது மேல்படிப்பு) |
| குலம் | : | கொங்கு வேளாளர் – செங்கண்ணி |
| குலதெய்வம் | : | மோளியபள்ளி அன்னமார் |
| தகப்பன் | : | பி. அப்புசாமி (விவசாயம்) |
| தாய் | : | ஏ. பாவாயி (லேட்) ஏ. மீனாம்பு (சித்தி) |
| உடன் பிறந்தோர் | : | ஓர் அக்கா, டாக்டர் (திருமணமானவர்)<br>ஒரு தங்கை M.Sc.,<br>ஒரு தம்பி +2 |
| எதிர்பார்ப்பு | : | டாக்டர் அல்லது என்ஜினியர் அல்லது<br>நல்ல பணியில் உள்ளவர்கள் |
| தொடர்பு முகவரி | : | NK பெரியசாமி B.Sc., (AS)<br>5/226, ஆசிரியர் குடியிருப்பு, நாமக்கல் அஞ்சல் – 637001<br>போன் : 04286–222075 / 9443971566 |

❖❖❖❖❖



கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும்

**நம்மால் முடியும்**

## கொங்கு திருமண தகவல் மையம்

1/6, சக்தி நிலா காம்ப்ளக்ஸ், NH-7, பைபாஸ் ரோடு,
வேலாயுதம்பாளையம் (அஞ்சல்) கரூர் Dt - 639 117
Ph : 7502617851 / 8883249714

‘கொங்கு கவுண்டர் இனத்தில் வரன் வேண்டுவோர்கள் தொடர்பு கொள்க’

B.E., B.Tech., M.E., MTech., MCA., MBA., மற்றும் அனைத்து டிகிரி, MBBS., MD., MS., BDS., தொழில் அதிபர்கள், வசதி படைத்த அனைத்து ஜாதகங்களும் உள்ளன. அரசாங்க வேலை, தனியார் வேலையில் உள்ள ஜாதகங்கள் உள்ளன.

❖❖❖❖❖